# தி.மு.க.வின் தேவை தமிழ்நாட்டிற்கு எப்போதும் தேவை!

இந்தியாவுல முன்னேறிய அல்லது உயர்ந்த சமூகம்ன்னு ஒன்னு இருக்கு. நூத்துக்கு ஏழெட்டு பேரு தான் அதுக்குள்ளாற வருவாங்க.

பாக்கி தொண்ணூத்தி சொச்ச பேரும் தான் இந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபைச் சார்ந்த, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் எல்லாம்.

இந்த தொண்ணூத்தி சொச்ச பேர் உள்ள ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அநீதி இழைச்சது யாருன்னா... முன்னாடி சொன்ன அந்த ஏழெட்டு பேர் உள்ள முன்னேறிய சமூகம் தான்.

அது எப்டீன்னா? எந்த படிப்பா இருந்தாலும் சரி, எந்த அரசு வேலையா இருந்தாலும், பெரிய பெரிய வேலையா இருந்தாலும் சரி இந்த முன்னேறிய சமூகத்தைச் சார்ந்த வங்கதான் படிப்பாங்க, வேலை செய்வாங்க.

மத்தவங்க எல்லாம் இவிங்களுக்கு அடிமைச் சேகவம் செய்யற மாதிரியான வேலைகள் செய்வாங்க. முடி வெட்டுறது, செருப்பு தைக்கிறது, மலம் அள்ளுறது, சாக்கடை நோண்டுறது, வாய்க்கால் வெட்டுறது, வீடு கட்டுறது, மரவேலை செய்யறது, ரோட்டு வேலை, குளத்து வேலை செய்யுறது, உலோக வேலை செய்யுறது, விவசாயம் செய்யுறது, நெசவு செய்யுறது, சாமி தூக்குறது, கொட்டா கட்டுறது...



**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்

இப்படி எல்லா வேலையையும் மத்தவங்க செய்வாங்க, ஆனா படிக்கிறது, படிச்சிட்டு இஞ்சினியர், டாக்டர், வழக்கறிஞர், ஆடிட்டர், குமாஸ்தா, டைப்பிஸ்ட்... இப்படியான வேலைகளை இந்த முன்னேறிய சமூகம் மட்டும் செய்வாங்க. அரசு வேலைகள் முழுக்க முழுக்க இவிங்க கிட்டத்தான் இருக்கும்.

இதைத்தான் சமூக அநீதி... அதாவது தொண்ணூத்தி சொச்சம் பேருக்கு வெறும் ஏழெட்டு பேரால நடத்தப்படக்கூடிய அநீதின்னு சொல்லி, அதுக்காக போராடிய இயக்கம்தான் திராவிட இயக்கம். பெரியார், அண்ணா, கலைஞர் எல்லாம் அதுக்காகத் தான் போராடினாங்க. போராடினா மட்டும் போதாது, ஆட்சி அதிகாரம் நம்ம கையில வந்தா தான், இந்த தொண்ணூத்தி சொச்சம் பேருக்கும், இந்த ஏழெட்டு பேரு மட்டும் அனுபவிக்கிற கல்வி, உயர்கல்வி, அரசு வேலைகள், தனியார் நிறுவன உயர் வேலைகள் எல்லாம் கிடைக்கும்ன்னு போராடினாங்க, ஆட்சியைப் புடிச்சாங்க, அதைச் சாதித்தும் காட்டினார்கள்.

இப்போ எல்லோருக்கும் எல்லாமும் என்கிற நிலை உருவாக்கப்பட்டிருக்கு. இந்த நிலை தான் முன்னேறிய அந்த ஏழெட்டு பேரில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களுக்கும் கல்வி வேலை வாய்ப்புக்களில் இடஒதுக்கீட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்தியது. அதுக்குப் பேரு தான் EWS அந்த முன்னேறிய வகுப்பினரில் ஏழை பாழைன்னா ஏதோ மாசம் இருபதாயிரம் தான் சம்பாதிப்பாங்க, சொந்தமா வீடு கூட கிடையாது. அப்படியே வீடு இருந்தாலும் அது வெறும் ஐநூறு சதுர அடில குடிசை வீடோ அல்லது ஓட்டு வீடாகவோத்தான் இருக்கும், அப்டீன்னு நீங்க நினைச்சு உச்சுக் கொட்டி, அவிங்களும் பாவம் தானே? அவங்களுக்கும் நம்ம இப்ப வெறும் அம்பது வருஷமா அனுபவிச்சிட்டிருக்குற இடஒதுக்கீட்டுல ஒரு பத்து பர்செண்ட தூக்கிக் கொடுத்து, அவங்களையும் வாழ்க்கைல தூக்கி விடுறதுல என்ன தப்புன்னு நினைச்சீங்கன்னா....

ஸாரி... நீங்க ஒரு லூஸுன்னு அர்த்தம்..!?

சார்... நீங்க இப்ப ஒரு அம்பது வருஷமா அனுபவிக்கிற இட ஒதுக்கீட்டை அஞ்சாயிரம் வருஷமா அவிங்க அனுபவிச்சிட்டு வந்தாங்க. அவிங்கள்ல இப்ப ஏழை பாழைன்னா யாருன்னு ஒன்றிய அரசு சொல்லுதுன்னா...

முன்னேறிய வகுப்பினரில் யார் யாரெல்லாம் மாசத்துக்கு வெறும், நல்ல புரிஞ்சுக்கோங்க மக்களே, வருஷத்துக்கு இல்ல... மாசத்துக்கு வெறும் அறுபத்தஞ்சாயிரம் அதாவது 65 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறாங்களோ, யாருக்கெல்லாம் ஐந்து ஏக்கருக்கு கீழ் நிலம் இருக்கோ (அதாவது ஐந்து ஏக்கர் வச்சிருந்தாலே அவிங்க எல்லாம் ஏழை தானாம்), யார் யாருக்கெல்லாம் ஒரே ஒரு கிரவுண்டுல காங்க்ரீட் வீடு இருக்கோ...

இவிங்கள்லாம் தான் ஏழை... அவிங்களுக்கு எல்லாம் இட ஒதுக்கீடு 10 பர்செண்ட் தரனும்ன்னு ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்துச்சி. ஆனா அதை எதிர்த்து அன்றைய திமுக அரசு வழக்குத் தொடுத்து, தமிழ்நாட்டில் அதை அமல்படுத்த மாட்டோம்ன்னு சொல்லிட்டாங்க. ஏன்னா அவிங்களுக்கு பத்து பர்செண்ட் போச்சுன்னா, அது நம்ம பாவப்பட்ட தொண்ணூத்தி சொச்சம் பேருக்கும் இப்போ கிடைச்சிட்டிருக்குற பர்செண்ட்லேர்ந்து தான் எடுத்து கொடுதாகனும்ங்கறதால தான் ஒரிஜினல் திராவிட இயக்கமான தி.மு.க. அதை இங்கே, நம் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தவில்லை..!

இது வரலாறு... ஆனா பாருங்க, நம்ம திருமா என்ன சொல்றாருன்னா? அந்த முன்னேறிய வகுப்பினருக்கு இடஒதுக்கீடு கொடுக்குறதும் ஒரு சமூகநீதி தானேன்னு ஒரு அறிவார்ந்த கேள்வியக் கேட்கிறார்..!

சகவாச தோஷம் அப்படி..! பா.ஜ.க.வுல ‘பா’ ன்னு சொல்லவே பயப்படுற கட்சியோட கூட்டணி வச்சிக்கிட்டு, இரண்டு பார்ப்பனர்களுக்கு அமைச்சர் பதவி, அதிலும் ஒருத்தருக்கு இந்து சமய அறநிலையத்துறை கொடுத்திருக்கும் பாஜகவின் குளோனிங் அரசில் பங்கேற்றிருக்கும் திருமா, இப்படி சமூக அநீதியை நியாயப்படுத்திப் பேசுவது ஆச்சர்யம் இல்லை தான்.

திருமா போன்றவர்கள் சோஃபாவுக்காகவோ அமைச்சர் பதவிகளுக்காகவோ கொள்கைகளை மாற்றித் திரித்துப் பேசி சுகம் கண்டு கொள்ளலாம். ஆனால் தி.மு.க. எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்த இடத்தில் இருந்தாலும் அதன் கொள்கைகளில் உறுதியாக இருக்கின்ற காரணத்தினாலேயே... அது பலமான எதிப்புக்களைக் கடந்தே.. போராடிப் போராடியே, தமிழ்நாட்டை இந்தியாவின் ஒரு மாறுபட்ட முன்னேறிய மாநிலமாக உருவாக்கி வருகிறது.

தி.மு.க.வின் தேவை தமிழ்நாட்டிற்கு எப்பொழுதும் தேவை..!

## இன்று (செப்.15) பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப். 15 – புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது: காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறி ஞர் தமிழ் மொழி உயர்வுக் காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காக வும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் ” இப்படை



தோற்கின் எப்படை வெல்லும் என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் ”மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை ”தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.9.2026 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாஸ்டர் தமிழ்ப்பித்தன்
### செப்டம்பர் 15 (2001)



**கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.**

**2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.**

**தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வந்துதித்தார் அண்ணா, கீழ் வானுதித்தக் கதிர் போலே!



பூவிதழின் மென்மையிலும், மென்மையான புனித உள்ளம்! அன்பு உள்ளம்! அரவணைக்கும் அன்னையுள்ளம் கொண்டு, உலக அரசியல் வரலாற்றில் இயக்கத்தொண்டர்களை தோழர்களாய், தம்பியராய் பாவித்து, பாசம் வைத்து, “தம்பிக்கு,” எனக் கடிதம் எழுதி, அண்ணன் தம்பி பாசப்பிணைப்பை கற்பித்து, காலதேவனின் கொடும் கரங்களில் கண்ணயரும் நேரம் வரை இனிய தம்பியர் புடைசூழ வலம் வந்த, அமைதிமிகு அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாள் இன்று.

தறியோசையும், தமிழோசையும் இணைந்தே ஒலித்த காஞ்சிமாநகரில், கல்லெல்லாம் சிலைசெய்த பல்லவரின் தொண்டை மண்டலத் தலைநகராம் காஞ்சியில், “தொண்டை நந்நாடோ, சான்றோருடைத்து” என்பதனை மெய்ப்பித்த நமது மன்னவராம் தென்னவர் ஏற்றிப் போற்றும் அறிவுநிறை அண்ணா அவர்கள் தோன்றினார்.

சாகுந்தலம், இரகுவம்சம், நாகாநந்தம், இத்னாவளி, பிரியதரிஷிகா, போன்ற பெரும் காப்பியங்களைப் படைத்த, காளிதாசப் பெரும்புலவனால்,” நகரேஷு காஞ்சி” எனப் புகழப்பட்ட ஆயிரம் ஆலயங்கள் கொண்ட ஆன்மீக பூமியாம் காஞ்சியில், பகுத்தறிவு கணைதொடுத்து, பழைய பஞ்சாக இழிவகற்றி, , சுயமரியாதை சுடரேந்தி, அறிவாயுதம் பலவற்றை தம்பியர்க்கு தயாரித்துத் தந்த அறிவாசான் அண்ணா அவர்கள் பிறந்தநாள் இந்த செப்டம்பர் 15.

சரித்திர பின்புலமின்றி, சாம்ராஜ்ய பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்துடன் தூய லட்சியங்களுடன் அருவிநடைத் தமிழால், ஆரியத்தின் மாயை தோலுரித்து, வேரறுத்து, அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர் படை பாசமலர் தொடுக்க, வெற்றி உலா வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சியில் கதிரவனாய் உதித்த நாள் இந்த செப்டம்பர் 15.

தலைவர் கலைஞரும் தனது அண்ணனின் தோற்றத்தை,

“ வந்துதித்தான் அண்ணன்!
கீழ் வானுதித்தக் கதிர் போல!
புரியாதோர்க்குப் புதிர்போல! “ என்றே புகழஞ்சலியாய்ப் பாடினார்.

இசையால் வசமாகா இதயமண்டோ? என்பார்கள். அதுபோல அண்ணாவின் நாவண்மைக்கு, வாதத்திறமைக்கு, நகைச்சுவை சிதறலுக்கு அன்றைய இளைஞர் உலகம் அவருக்கு கட்டுண்டு கிடந்தது.

தனது அரசியல் பொது வாழ்வை எப்படி எளிமையாக தொடங்கினாரோ, அதுபோலவே எளிமை பாதையில் கடைசிவரை தொடர்ந்த பெருமகன் பேரறிஞர் அண்ணா.

அவருக்கு அரசியலில் கோபம், நட்பில் வைராக்கியம் என்றெல்லாம் பெரிதாக இருந்ததே இல்லை.

அவரின் கொள்கையில் மாறுபாடு கண்டவர்கள் கூட, குளிர் தரும் அவரது அமுதத்தமிழில் இளைப்பாரிடவே எண்ணினர். அதை ஏற்றனர். மனதிற்குள் போற்றினர்.

தனது எண்ணங்களை தெளிவாக்கவும், வலியுறுத்தவும் கேட்போர் நெஞ்சில் பதிய வைக்கவும், உருவகங்களை பயன்படுத்துவதில் அண்ணா தன்னிகரற்று விளங்கினார்.

மின்சார விளக்குகள் தேவையில்லை.
குத்துவிளக்குத்தான் இருக்கவேண்டும்.

**விமானம் பறக்கக் கூடாது.**
**கருடன்தான் பறக்க வேண்டும்.**

**ரயில் வண்டி கூடாது.**
**கட்டை வண்டி தான் சிறந்தது.**

**தீப்பெட்டி தேவையில்லை.**
**சிக்கி, முக்கி கல் தான் தேவை.**

**துப்பாக்கி வேண்டாம்.**
**வேலும், வில்லும் போதும்.**

**மாளிகைகள் தேவையில்லை.**
**பர்ணசாலைகள்தான் வேண்டும். என்று யாரும் பேசுவதில்லை.**

**பென்சிலின் மருந்தின் பெருமை பேச வேண்டிய இக்காலத்தில் “சஞ்சீவி பர்வதத்தின் “ அருமையைப் பற்றி பேசலாமா?**

**அதற்குப் பள்ளிக்கூடங்கள் எதற்கு?**
**பஜனைக் கூடங்கள் போதுமே?**

**தசரதன் வீட்டில் டெலிபோன் இருந்ததில்லை.**

**ஸ்ரீராமன் ரேடியோ கேட்டதில்லை.**

**சிபி சினிமா பார்த்ததில்லை.**

**ஆனால் நம் காலத்தில் இவை அனைத்தும் இருக்கிறது. சிலர் கூறுகின்றனர் காலம் கெட்டுவிட்டதென்று.**

**கடிகாரத்தை கவனித்து நடக்கின்ற மேனாட்டினர் முன்னேற்றத்தின் உச்சியில் உள்ளனர்.**
**பஞ்சாகத்தைப் பார்த்து வருகின்ற நாம் பின்னேற்றத்தின் கடைகோடியில் இருக்கிறோம்.**

**விஞ்ஞானியின் அறிவு கண்டுபிடித்துக் கொடுத்த கிராமபோனில் பழைய பஜனைப்பாட்டை பாடவிட்டு மகிழ்கிறோமே, மகிழலாமா?**
**யோசித்துப்பார்.**

**இது கேவலம் மூடநம்பிக்கை.**
**காலம் மாறக்கூடியது.**
**மாறிக்கொண்டே தான் இருக்கும்.**
**காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும்.**
**மாறாத சமுதாயம் மறைந்து போகும்.**
**இப்படி ஈரோட்டுக் கணைகள் அவரது எழுத்திலும், பேச்சிலும் எதிர் பட்டது.**

அந்நாளைய ஆட்சியாளர்களின் உல்லாசப் போக்கை, ஊதாறித்தனத்தை உணர்த்த வந்த அண்ணா, “ கும்பியெரியுது! குடல் கருகுது! கோட்டை வாசிகளுக்கு, கோடை வாசம் ஒரு கேடா?’ எனச் சாடினார்.

அண்ணாவின் சொல்வன்மை மிகப் பெரிய தம்பியர் படையை அவருக்கேற்படுத்தியது. கையில் காசில்லாவிட்டாலும், மனதில் மாசில்லாமல் துடிப்போடு செயலாற்றும் தொண்டர்கள் வேறு எந்த இயக்கத்திற்கும் இதுபோல் அமைந்ததில்லை.

இப்படித்தான் அண்ணா என்று தனித்த அடையாளம் இல்லாமல் அண்ணனாய், தலைவனாய், எளியமனதினராய், புதுமை புத்தனாய், பொன்னாசை, பொருளாசை அற்றவராய், மேற்கத்திய சிந்தனை உணர்ந்தவராய், நாடக விற்பன்னராய், நவீன தமிழின் தூதுவராய் என்று இன்னும், இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

தந்தைப் பெரியாரை விட்டுப் பிரிந்த போதும் தனி இயக்கம் காண அவர் விரும்பவே இல்லை. காலச்சூழல் சுற்றியிருந்த நண்பர்கள், தோழர்கள், உயிரனைய தம்பியரின் உணர்வுகளுக்கு மதிப்பு என்ற நிலைப்பாடே அவரை திராவிட முன்னேற்றக் கழகம் காண தள்ளியது.

ஆரம்பத்தில் அண்ணா அவர்களுக்கு சென்னையில் வீடு இல்லை. அதை அவர் பெரிதாக விரும்பியதுமில்லை. திமுக துவங்கும் முன் சென்னை வந்தால், அவரது துணைவியார் இராணி அம்மையாரின் சகோதரர் சிவசங்கரன் அவர்களது எண் 8. கருப்பண்ணன் தெரு, சென்னை 1ல் உள்ள வீட்டிலும், இரா. செழியன் மற்றும் பாவண்ணன் ஆகியோர் வாடகைக்கு எடுத்திருந்த சென்னை செம்புதாசு செட்டித்தெருவில் அடுக்கு மாடி குடியிருப்பில் 5 வது மாடியில் அமைந்திருந்த சிறிய அறையில் தான் தங்குவார்.

அதற்கு பின்னர் அண்ணாவின் நண்பர் டபிள்யூ. கே. தேவராஜன் அவர்களின் 182, கோவிந்தப்ப நாய்கன் தெரு இல்லத்திலும், திராவிட முன்னேற்றக் கழக தொடக்க கால அலுவலகம் அமைந்திருந்த எண்: 202 தங்கசாலைத் தெரு. நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் இல்லம். மற்றொரு நண்பர் எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரது இல்லங்களிலும், பல நாட்கள் பேராசியரின் புரசைவாக்கம் இல்லம் என்று தான் அண்ணா அவர்கள் சென்னை வந்தால் தங்குவார்.

1958 ல் தான் சென்னை நுங்கம்பாக்கத்தில் அண்ணாவிற்கென்று சொந்த வீடு, அவரது சிற்றன்னை (தொத்தா) இராசாமணி அம்மையார் மற்றும் அவரது நண்பர் வாலாஜாபாத் தேவராஜன் ஆகியோரின் பெருமுயற்சியால் ரூ. 35000 க்கு வாங்கப்பட்டது.

( இதைக் குறிப்பிடக் காரணம் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை கோபாலபுரம் இல்லத்தை 1954 லேயே வாங்கி விட்டார்.).

இப்படி எளிமையின் உறைவிடமாக திகழ்ந்த அண்ணா தான் ஒரு மிகப்பெரிய சமூக அமைப்பின், முன்னணி அரசியல் கட்சியின் தலைவரென ஒரு நாளும் பெருமிதம் கொண்டதே இல்லை.

எனக்காக எனது தம்பியர் இல்லை.

எனது தம்பியருக்காக நான்! அதுகூடத் தவறு. எனது தம்பியரால் நான் என்பதே சரி.

என்னைப் பெருக்கினால் எனது தம்பிகள்!

எனது தம்பியரைக் கூட்டினால் நான்! என்பார்.

சமூகத்தின் மீதும், வேறு பட்ட கலை, பண்பாட்டின் மீதும் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அண்ணா அவர்கள் டெல்லிக்கு இரண்டு முறை காரிலேயே பயணம் சென்றார்.

போகும் வழியில் ஹம்பி, ஹைதராபாத், எல்லோரா குகை, அக்பரின் பதேபூர் சிக்ரி, தாஜ்மகால் போன்ற வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை பார்த்தும், ரசித்தும் பரவசமடைவார்.

அந்தந்த இடங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை உடன்வருவோருக்கு விளக்கி சொல்வதில் அவருக்கு அப்படி ஒரு மகிழ்ச்சி!

அதோடு உள்ளூர் பயணம் என்றால், பெரும்பாலும் இரவில் தான் பயணம். போகும் வழியில் நடைபெறும் தெருக்கூத்து, நாடகம் போன்றவற்றை சற்று தள்ளி, தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு ரசிப்பதில் அவருக்கு மிகுந்த நாட்டம் இருந்தது.( இன்று அரிதாரம் பூசிய அரைடிக்கட்டுகள் அந்த வரிசையில் தங்களை அடுக்கிப் பார்க்கிற வெட்கக்கேடும் தமிழ்நாட்டிலல்லவா, சட்டப்பேரவையில் அரங்கேறுகிறது)

பகலில் எதிரே தென் படும் சிறு கூடை வியாபாரிகளிடம் தான்



**வழக்கறிஞர் வெ. அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

யாரென்று விபரம் சொல்லாமல், தின்பண்டங்கள் அனைத்தையும் மொத்தமாக விலை கொடுத்துவாங்கி, அந்த ஏழையருக்கு பேருதவி புரிந்தவர் எளிமையின் சிகரம் அறிஞர் அண்ணா.

தனக்குப் பின்னால், தன்னை விட சிறந்தோரை அடையாளம் காட்டுவதே ஒரு நல்ல தலைவனின் இலக்கணம் என்பார்கள்.

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் இருக்கும் போதே, தனது தம்பியராம் தலைவர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், மதியழகன் போன்றோருக்கு தனித்தனி அடையாளங்கள், பொறுப்புகள், போராட்ட, மாநாட்டு தலைமையை கொடுத்து , அவர்தம் சிறப்புகள் கண்டு பூரித்துப் போனார்.

“நான் கோபமாக இருக்கிறேன் என்றால், அதை முதலில் கண்டு கொள்வது தம்பி கருணாநிதி தான். அதுமட்டுமல்ல நான் எதன்மீது கோபமாக இருக்கிறேனோ, அதன் மீது அவரும் கோபமாக இருப்பது போல காட்டிக் கொள்வார்.

இந்த உண்மை எனக்கு எப்படி தெரியுமென்றால் நான் தம்பி கருணாநிதிக்கு முன்பே கலைத்துறைக்கு வந்தவன்.

நெடுஞ்செழியன் எப்போதும் என்னிடம் வந்து, சற்று நேரம் எனது குறிப்பையுணர்ந்து, கவனித்து, என்னிடம் திட்டும் வாங்கி, அண்ணா கோபமாத்தான் இருக்கிறார் என்று தாமதமாக புரிந்து கொள்வார்.

“ என்னை உணர்ந்தவர்களில் முற்றிலும் உணர்ந்தவர் தம்பி கருணாநிதி என்பேன். “

“திராவிட இயக்கத்தின் முதல் பாதியை நான் முடித்திருக்கிறேன். மீதியை தம்பி கருணாநிதி தொடருவார்.” என்று மன்னார்குடியில் மாசற்ற அண்ணா மனந்திறந்த உறுதி கூறினார்.

இப்படி தலைவர் கலைஞர் அவர்களை அண்ணா அவர்கள் பல முறை அடையாளப்படுத்தியிருக்கிறார்.

அண்ணா அவர்கள், 1962 ல் காஞ்சிபுரம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பினை இழந்த பின்னர் அவரது உற்ற நண்பர் புட்டாசாமி ஐயரின் வற்புறுத்தலின் பேரில் பெங்களூர் செல்கிறார்.

அங்கு சென்ற அண்ணா அங்கிருந்து காஞ்சிபுரம் திராவிடநாடு இதழுக்கு இப்படி எழுதுகிறார் “ தம்பி, சட்டசபை தேர்தலில் தோற்ற நான் பெங்களுக்கு வந்திருக்கும் இடத்தின் பெயர் ஜெய் ( வெற்றி ) நகர். தங்கிருக்கும் வீட்டின் பெயரோ , ஜெயவிலாஸ் வேடிக்கை பார்த்தாயா? “ என்று தனது தோல்வியைக்கூட நகைச்சுவையாக்கிய பற்றற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இப்படி வாராது வந்த மாமணியாய், தனது தீர்க்கமான எழுத்தால், ஆற்றொழுக்குத் தமிழால், நகைச்சுவை திறத்தால், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போமென்ற எளியோர் காவலனாய்த் திகழ்ந்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

அந்த அண்ணா தம்பியரைத் தவிக்கவிட்டு, தமிழரைப் பதைக்க விட்டு சாவில்லாச் சரித்திரத்தில் கலந்த 1969 பிப்ரவரி 3 ம் நாள் அன்று உலகமே இருண்டதென ஓர் உணர்வு!

திக்கு தெரியாத காட்டில், இக்கட்டில் ஆழ்ந்தது போன்ற தவிப்பு!

வக்கற்று போனோமோ? வாழ வழியற்றுப் போகுமோ? என தமிழரெல்லாம் அவரவர் நிலையில் அழுது, அரண்டு, அபயம் தேடினர்.

இடையே ஓர் குரல்!

அது,

அண்ணாவின் இதயச்சிந்தனையாய், எழுத்து, பேச்சு, நாடகம், கலை, இலக்கியம், திரை, தெளிந்த மனம், தொலைநோக்குப் பார்வை, சமூக மதிப்பீடு, தோல்வியிலும், துரோகத்திலும், துவளாத நெஞ்சுரம், இவையும், இன்னும் எண்ணற்ற சாயல்கொண்டு, அண்ணாவின் நிழலாய் தொடர்ந்த உருவம், அவரது இதயத்தை யாசித்து நின்றது.

அந்த உருவம், படைநடத்த, பகை முடிக்க, தடையுடைக்க, தமிழுரை வழிநடத்த, பண்பட்ட அண்ணாவின் வெண்பட்டு இதயத்தை அன்று வேண்டி நின்ற, அண்ணாவாய் உருகொண்ட, இன்னா செய்தாரையும், அவர் நாண, நன்னயம் செய்த நமது உயிரனையத்தலைவர் கலைஞரவர்கள்.

அந்தத் தலைவனின் வளர்ப்பாய், வார்ப்பாய், அதே பகுத்தறிவுச் சிந்தனையுடன், சுயமரியாதை பாதையில் நாம் பாதுகாப்பாய் பயணிக்க, ஆரிய வருணாசிரம கேடுகளை களைய, நாளும் சுழலும் சூரியனாம், நம்முயிர் தலைவர், திராவிடப் பேரசர் தளபதியர்கள் அண்ணாவின் 117வது பிறந்தநாளாம் நாளாம் இன்று காலை சென்னை அண்ணா சாலையிலிருந்து புறப்படும் பேரணிக்கு தலைமையேற்கிறார்.

உலக வரலாற்றில் ஒரு இயக்கத்தை கட்டியமைத்த, தலைவர் மறைந்து, அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக, அவரை ஆட்சியில், கட்சியில் அணுப்பொழுதும் மறவாமல், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கலாமண்டபங்கள், நினைவாலயம், நூலகங்கள், எண்ணற்ற மக்கள் நல திட்டங்கள் என சுவாசிக்கும் வாசிப்பாகவே, அண்ணா! அண்ணா! என உருகிய தலைவர் கலைஞர் பாதையில் தொடரோட்டமாய் பேரறிஞர் புகழ் போற்றும் இயக்கம் வேரேதும் கண்டதில்லை.

அண்ணாவின் கனிவும், அவர் தலைவர் ஐயா பெரியாரின் துணிவும், தலைவர் கலைஞரின் உள்ள உறுதியும், கம்பீரமும் கொண்டு நமை வழிநடத்தும் மாண்புமிகு தளபதியவர்கள் பின்னால் அணிவகுப்போம்!

அண்ணாவின் பெருமை சொல்லி!
கண்ணான தலைவர் கலைஞரின்
தம்பியராய் தலைநகர் சென்னையில்!
ஓங்குக பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும்புகழ்!